/ —

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108527

1. District மாவட்டம் : திருப்பூர் PS காவல்நிலையம்: [illegible] Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 10/2021/DC/TPR Date நாள்: 01.10.2021

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.9.2021 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1730 Time to : நேரம் வரை 2345 hrs
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021 Time : நேரம் 1300 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II Time : நேரம் 1300 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் [illegible] 1 கி.மீ தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி உதவி செயற்பொறியாளர் அலுவலகம், TANGEDCO திருப்பூர் நகரம்/வடக்கு. [illegible] திருப்பூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B. ஜெயக்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 39 yr (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation தொழில் : Spl. Tahsildar, [illegible] Spl District [illegible] Tiruppur. (g) Address : முகவரி Office of District Collectorate Tiruppur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   D. சிவக்குமார் வயது 54. S/o தண்டபாணி, உதவி செயற்பொறியாளர் [illegible] திருப்பூர் நகரம்/வடக்கு, [illegible], திருப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
01.10.2021.

[signature] 01/10/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

G. Arumugam
Name: பெயர் Inspector of police, Vel...
Rank: நிலை Kanchipuram No. எண் .........
OD at Erode
I/c Inspector, Tiruppur

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/2021/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 01.10.2021-ம் தேதி காலை 13.00 மணிக்கு காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர், அயல்பணி ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பொறுப்பு ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது திரு. பா.ஜெயக்குமார், தனி வட்டாட்சியர்/துணை மேலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புநர் திரு. பா.ஜெயக்குமார், தனி வட்டாட்சியர் / துணை மேலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அயல்பணி ஈரோடு ஊ.த.க பிரிவு, பொறுப்பு காவல் ஆய்வாளர், திருப்பூர். அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் உதவி செயற்பொறியாளர், நகரம்/மேற்கு, தமிழ்நாடுமின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருப்பூர் - புகார் மனு வழங்குதல் - தொடர்பாக பார்வை : திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண் 20653/2021/A2 நாள் 30.09.2021 நேற்று 30.09.2021-ம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம், குமார் நகரில் அமைந்துள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நகரம்/மேற்கு, திருப்பூர் மற்றும் திருப்பூர் கோட்டம் இயக்குதலும் பேணுதலும் செயற்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் மற்றும் போர்மேன், கேங்மேன், வணிக ஆய்வாளர் ஆகியோர்கள் பொதுமக்களிடமிருந்து விவசாய மின்இணைப்பு, வீட்டுமனை மற்றும் தொழிற்சாலை மின் இணைப்பு மின் இணைப்புகள் வழங்க, மீட்டர் மாற்றி அமைக்க, டேரிப் மாற்றம் போன்ற காரணங்களுக்காக மாமூல் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு

ஆய்வாளர், அயல்பணியாக ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பொறுப்பு ஆய்வாளர் திரு.Gஆறுமுகம் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை 30.09.2021-ம் தேதி மாலை சுமார் 17.30 மணிமுதல் 30.09.2021- ம் தேதி இரவு 23.45 மணிவரை திடீர் தணிக்கை செய்தும் திரு.சிவக்குமார் த/பெ.தண்டபாணி, உதவி செயற்பொறியாளர், நகரம்/மேற்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருப்பூர் அவர்களிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.37,820/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.37,820/- மேற்படி உதவி செயற்பொறியாளர் நகரம்/மேற்கு இயக்குதலும் & பேணுதலும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருப்பூர் அலுவலகத்தின் வருகைப்பதிவேடு ஜெராக்ஸ் நகல்கள் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXXX பா.ஜெயக்குமார், தனி வட்டாட்சியர் / துணை மேலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர். நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Sir, received the above written complaint with enclosures on 01.10.2021 at 13.00 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.10/2021/AC/TPR U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ஒப்பம் xxxx G.ஆறுமுகம் 01/10/2021 Inspector of Police, V&AC, Kanchipuram, OD at Erode, I/c Inspector of Police, V&AC Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை 1. திரு. பா.ஜெயக்குமார், தனி வட்டாட்சியர்/ துணை மேலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் 2. திரு.G.ஆறுமுகம், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அயல்பணி ஊ.த.க பிரிவு ஈரோடு, பொறுப்பு ஆய்வாளர் ஊ.த.க பிரிவு திருப்பூர். இன்று 30.09.2021-ம் தேதி மாலை 17.30 மணிக்கு திருப்பூர் மாவட்டம் குமார் நகரில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயற்பொறியாளர் மற்றும்

உதவி செயற்பொறியாளர் நகரம்/மேற்கு, திருப்பூர் மற்றும் திருப்பூர் கோட்டம் இயக்குதலும் பேணுதலும் செயற்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் மற்றும் போர்மேன், கேங்மேன், வணிக ஆய்வாளர் ஆகியோர்கள் பொதுமக்களிடமிருந்து விவசாய மின்இணைப்பு, வீட்டுமனை மற்றும் தொழிற்சாலை மின் இணைப்பு மின் இணைப்புகள் வழங்க, மீட்டர் மாற்றி அமைக்க, டேரிப் மாற்றம் போன்ற காரணங்களுக்காக மாமூல் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி அலுவலகத்தை திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் பா.ஜெயக்குமார் ஆகிய நான் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர், அயல்பணியாக ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பொறுப்பு ஆய்வாளர் திரு.ஆறுமுகம் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் ரகசியமாக மேற்படி அலுவலகத்தை கண்காணித்து திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை பின்வருமாறு. மேற்படி அலுவலகமானது திருப்பூர் அவிநாசி ரோட்டில் குமார் நகரில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. மேற்படி அலுவலக வளாகத்திற்குள் செயற்பொறியாளர் அலுவலகம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் நகரம்/மேற்கு, திருப்பூர், 235 SS அலுவலகம் அமைந்துள்ளது. உதவி செயற்பொறியாளர் அலுவலகம் நகரம்/மேற்கு அலுவலகமானது கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. உள்ளே நுழைந்தவுடன் வடக்கு பக்கம் தெற்கு பார்த்தவாறு மின்கட்டண வசூல் மையமும், தெற்கில் வடக்கு பார்த்தவாறு ஹால் அமைந்துள்ளது. மேற்படி ஹாலில் பணியாளர்கள் அமர்ந்திருந்து வேலையை கவனித்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் திடீர் ஆய்வுக்காக வந்த விபரத்தை தெரிவித்து விட்டு அவர்களை தொடர்ந்து வேலை செய்யும்படி அறிவுறுத்தி விட்டு அந்த ஹாலின் தென் மேற்கே வடக்கு பார்த்து அமைந்துள்ள அலுவலகத்திற்குள்ளே உதவி செயற்பொறியாளர் அறையை பார்க்க அதில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம் சென்று ஆய்வுக்குழுவினர் தங்களை அறிமுகம் கொண்டு வைத்து திடீர் ஆய்வுக்காக வந்த விபரத்தை தெரிவித்து அவரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.சிவக்குமார் த/பெ.தண்டபாணி என்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருப்பூர் நகரம்/மேற்கு உதவி செயற்பொறியாளராக கடந்த 24.08.2018 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அப்போது அவரிடம் இருந்த பணம் பற்றி கேட்ட போது அவர்

தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.37,820/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்டபோது அவர் முதலில் தன் மகன் மேற்படிப்பு படிக்க லண்டன் செல்ல உள்ளதால் டிக்கட் வாங்க மேற்படி பணம் வைத்துள்ளதாகவும், பின்பு வீட்டிற்கு பொருட்கள் வாங்க வைத்துள்ளதாகவும், அதனை தொடர்ந்து தன் மகன் வெளிநாடு செல்வதால் அவருக்கு வேண்டிய பொருட்கள் வாங்க பணம் வைத்துள்ளதாகவும், பின்பு அதற்கு முரணாக அவருடைய அலுவலகத்தில் மின்கம்பம் மற்றும் மின்சார பொருட்கள் வாங்க வைத்துள்ளதாகவும் சொன்னார். எனவே அந்த பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாமல் முன்னுக்கு பின் முரணாக மாறி மாறி பதில் சொன்னதால் அந்த பணம் ரூ.37,820/- லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவரது மேஜை மற்றும் அறையில் சோதனையிட்ட போது எந்த பணமோ பொருளோ கிடைக்கவில்லை. மேற்படி ஹாலில் உள்ள பணியாளர்களைப் பற்றி விசாரிக்க வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த திரு.சக்திவேல் என்பவரை விசாரிக்க தான் $2^{1/2}$ வருடமாக வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் அவரிடம் பணம் பற்றி கேட்ட போது அவர் வைத்திருந்த தனது சட்டையின் மேல் இடது பாக்கெட்டில் இருந்து ரூ.510/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 510/- ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறைக்கு கிழக்கே ஸ்பெசல் போர் மேன் சௌந்தர்ராஜன் அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க கடந்த $4^{1/2}$ வருடமாக மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.2,150/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 2,150/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இருக்கைக்கு கிழக்கே திரு.ரவிச்சந்திரன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க தான் போர்மேனாக கடந்த 4 வருடமாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.290/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் ரூ.290/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி ஹாலில் போடப்பட்டுள்ள பெஞ்சில் திரு.ராஜா த/பெ.சுப்பையா கேங்மேன் மற்றும் கேங்மேன்

சதீஷ்குமார் த/பெ.பெரியசாமி மற்றும் பழனிச்சாமி த/பெ.குமரன், தனிநபர் ஆகியோர் இருந்தார்கள். அவர்களை பற்றி விசாரிக்க ராஜா என்பவர் மேற்படி அலுவலகத்தில் சுமார் 8 மாதமாக கேங்மேனாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.870/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் ரூ.870/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்பு அருகில் இருந்த சதீஷ்குமார் என்பவரை பற்றி விசாரிக்க அவரும் கடந்த 8 மாதங்களாக கேங்மேனாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.900/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் ரூ.900/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அருகில் இருந்த தனிநபர் பழனிச்சாமியை விசாரிக்க அவர் வெளியில் எலக்ட்ரீசியன் வேலை செயது வருவதாகவும் மேற்படி அலுவலகத்தில் ஏதேனும் வேலை இருந்தால் செய்து கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் பற்றி விசாரிக்க ரூ.800/-ஐ சட்டை பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் ரூ.800/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த ஹாலில் உள்ள டேபிள் டிராயர் மற்றும் ரேக்கில் சோதனை செய்த பார்த்ததில் எந்த பணமும் இல்லை. அதனை தொடர்ந்து மேற்படி ஹாலின் வடபுறம் அமைந்திருந்த மின்சார கட்டண வசூல் அறைக்குள் M.இளங்கோ என்பவர் இருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க அவர் போர்மேனாக இடுவம்பாளையம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் கடந்த ஒருவருடமாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரைப் பற்றி விசாரிக்க அவரது சொந்த ஊர் காரமடை என்றும் அவரது இருசக்கர வாகனத்தை இங்கு நிறுத்தி விட்டு பஸ்ஸில் செல்வதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் பற்றி விசாரிக்க ரூ.300/-ஐ சட்டை பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் ரூ.300/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மின்சார கட்டண வசூல் மையத்தில் பூபாலன் என்பவர் இருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க தான் கேங்மேனாக இந்த அலுவலகத்தில் 01.03.2021-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த

பணம் பற்றி விசாரிக்க ரூ.200/-ஐ சட்டை பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 200/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி மின்கட்டண வசூல் மையத்தில் உள்ள டேபிள் டிராயர் மற்றும் ரேக்கில் சோதனை செய்த பார்த்ததில் எந்த பணமும் இல்லை. அதனை தொடர்ந்து வசூல் மையத்திற்கு மேற்கே அமைந்துள்ள இடத்தை பார்க்க பழைய மின்சாதன பொருட்கள் காணப்பட்டது. அந்த அறையில் பணமோ பொருளோ இல்லை. அந்த அலுவலகத்தில் வடகிழக்கே அமைந்துள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தகவல் சேகரிப்பு/மின்பகிர்மான மேலாண்மை அமைப்பு என்ற கட்டிடத்தின் முதல் மாடியில் மேற்கு பார்த்திருந்த செயற்பொறியாளர் அலுவலகத்தில் நுழைந்து அங்கிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சந்திரசேகரன் என்றும் TANGEDCO திருப்பூர் கோட்டம் இயக்குதலும் பேணுதலும் அலுவலகத்தில் கடந்த 25.11.2017 முதல் செயற்பொறியாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் தனது பேண்ட் பாக்கட்டில் இருந்து ரூபாய் 440/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 440/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் உள்ள டேபிள் டிராயர் மற்றும் ரேக்குகளை சோதனை செய்து பார்த்ததில் பணமோ பொருளோ இல்லை. அந்த அலுவலகத்தை ஒட்டி கிழக்கு பார்த்திருந்த அறையில் இருந்த கணேஷ்குமார் என்பவரை விசாரிக்க தான் போர்மேனாக முதலிபாளையம் செக்சனில் பணிபுரிந்து தற்போது தற்காலிகமாக குமார் நகர் E.E (O&M) அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.5,090/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க தனது மகன் சென்னை கிரிக்கெட் விளையாட செல்வதால் அவருக்கு கொடுப்பதற்காக சில்லறையாக மாற்றி கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 5,090/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின் அருகில் இருந்த C.V.பிரதீபன் என்பவரை விசாரிக்க போர்மேனாக கரைப்புதூர் செக்சனில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார்.

அவரிடம் உள்ள பணம் பற்றி கேட்க ரூ.3,410/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 3,410/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின் R.சரவணன் என்பவரை பற்றி விசாரிக்க தான் வணிக ஆய்வாளராக தாராபுரம் செட்டிபாளையம் உதவி பொறியாளர் அலுவலகத்தில் கடந்த 3 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும் தற்போது செயற்பொறியாளர் அலுவலகத்தில் விவசாய மின்மோட்டாருக்கு மின்இணைப்பு கொடுப்பதற்கான விண்ணப்பத்தினை பெற வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.160/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 160/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின் P.அவிநாசியப்பன் என்பவரை பற்றி விசாரிக்க தான் மதிப்பீட்டு அலுவலராக கடந்த ஏப்ரல் 2020-ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.1630/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 1630/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அறையில் இருந்த டேபிள் டிராயர் மற்றும் ரேக்குகளை சோதனை செய்து பார்த்ததில் எந்த பணமும் இல்லை. அதன் பின் முதல் தளத்தில் இருந்து தரைத்தளத்தில் அமைந்துள்ள மேற்கு பார்த்து இருந்த அலுவலகஅறையை பார்த்தபோது அதன் முகப்பில் SCADA CONTROL CENTER என்று எழுதப்பட்டு இருந்தது. அந்த அறையின் முன்பு நின்று கொண்டிருந்த நபர்களை பற்றி விசாரிக்க அவர்கள் தான் ம.விஜயலட்சுமணன் என்பவரை விசாரிக்க தான் AE/SCADA ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவரிடம் பணம் எதுவும் கைவசம் இல்லை என்று தெரிவித்தார். பின் அருகில் இருந்த நபரை விசாரிக்க திருமதி.S.திருக்கோவை என்வரை விசாரிக்க தான் AE/SCADA Indoor ஆக கடந்த ஒன்றரை வருடமாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.175/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 175/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின் அருகில் இருந்த நபரை விசாரிக்க திரு.அருண்ரத்னவேல் என்பவரை விசாரிக்க தான் உதவி பொறியாளராக /SCADA ஆக பிப்ரவரி 2021-ம் ஆண்டு முதல் பணிபுரிந்து

வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.2,080/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 2,080/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின் அந்த அலுவலகத்தில் போர்டிகோவில் இரண்டு வாகனங்களின் அருகில் நின்று கொண்டிருந்த நபர்களை விசாரிக்க தான் தனது பெயர் T.தினேஷ்குமார் என்றும் தனியார் ஓட்டுநராக வாகனம் எண் TN 37 CA 9618 CHEVARLET TAVERA என்ற வாகனத்தை திருமதி சுமதி செயற்பொறியாளர்/SCADA அவர்களுக்கு கடந்த ஒரு வருடமாக ஓட்டி வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.450/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 450/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அருகில் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் A.வனராஜ் என்றும் தான் தனியார் ஓட்டுநராக வாகன எண் TN 05 BD 8767 CHEVARLET ENJOY வாகனத்தை சந்திரசேகரன் செயற்பொறியாளர் அவர்களுக்கு கடந்த மூன்று வாரமாக ஓட்டி வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.1030/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்பதற்கான தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் ரூபாய் 1030/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இரு வாகனத்தையும் சோதனை செய்த பார்த்ததில் எந்த பணமோ பொருளோ இல்லை. மேற்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உதவி செயற்பொறியாளர் நகரம்/மேற்கு,திருப்பூர் அலுவலகத்தின் வருகைப்பதிவேடு 2021 ம் வருடம் ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை Printed Pages 1 முதல் 9 வரையிலானதை பக்கத்தை நகல் எடுத்து உண்மை நகல் என்று செயற்பொறியாளர் திரு. சந்திரசேகரன் அவர்களால் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையானது 30.09.2021 ஆம் தேதி சுமார் 17.30 மணிக்கு துவங்கி 30.09.2021 ஆம் தேதி 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உதவி செயற்பொறியாளர் நகரம்/மேற்கு, திருப்பூர் அலுவலகத்தின் ஹாலில் வைத்து மடிக்கணினியில் தலைமைக்காவலர் 740 திரு.வெங்கடேசன் என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு அலுவலர்களையும் மற்ற

நபர்களையும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். பெண் அலுவலரை பெண் காவல் ஆய்வாளரால் தணிக்கை செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx பா.ஜெயக்குமார், தனி வட்டாட்சியர் / துணை மேலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர், ஒப்பம் xxxx KT. சந்திரசேகரன், செயற்பொறியாளர், TANGEDCO, இயக்குதலும் பேணுதலும் குமார்நகர், திருப்பூர், ஒப்பம் xxxx D.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர், நகரம்/மேற்கு, TANGEDCO, குமார்நகர், திருப்பூர், ஒப்பம் xxxx M.விஜயலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர், ஒப்பம் xxxx G.ஆறுமுகம், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அயல்பணி ஊ.த.க பிரிவு ஈரோடு,பொறுப்புஆய்வாளர் ஊ.த.க பிரிவு திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.37,820/-, இன்று 01.10.2021-ம் தேதி 13.00 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.10/2021/AC/TPR U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 கீழ் 13.00 மணிமுதல் 14.15 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள், பணம் ரூ.37,820/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.